


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2024) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியருடைய ஆராய்ச்சி திறனை மேம்படுத்திடவும், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்திடவும் முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகைத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்களுக்கு ஆராய்ச்சி படிப்பைத் தொடர மாதம் ரூ.25,000/– ஊக்கத் தொகை பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கல்லூரி கல்வி இயக்குநர் எஸ்.கார்மேகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.08.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வேளாண்மை – உழவர் நலத்துறையில் 158 உதவி தோட்டக்கலை அலுவலர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை, எழிலகத்தில் ரூ.5.12 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்ட

# மாநில அவசர கால செயல்பாட்டு மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 23-

சென்னை, எழிலகத்தில் 5.12 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.08.2024) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் சென்னை, எழிலகத்தில் 5.12 கோடி ரூபாய் செலவில் 10,000 சதுர அடி பரப்பில் 24 மணி நேரமும் செயல்படும் பல்வகை பேரிடர்களுக்கான முன்னெச்சரிக்கை மையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தினை திறந்து வைத்தார்.

**பேரிடர் தொடர்பான பணிகளுக்கு தனிக்கவனம்!**

விவசாயப் பெருமக்கள், மீனவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் பெருமழை, வெள்ளம் போன்ற பேரிடர்கள் குறித்த முன்னெச்சரிக்கை தகவல்களை உடனுக்குடன் சென்றடைவதை உறுதி செய்வது, முன்கூட்டியே வானிலை எச்சரிக்கைகளை வழங்கிட வானிலை கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்துவது, வெள்ளத் தணிப்பு திட்டங்களை செயல்படுத்துவது போன்ற பேரிடர் தொடர்பான பணிகளை மேற்கொள்ள அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது.

அந்த வகையில், பொதுமக்களுக்கு பேரிடர் முன்னெச்சரிக்கை வழங்கும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த 1400 தானியங்கி மழைமானிகள் மற்றும் 100 தானியங்கி வானிலை நிலையங்கள், இராமநாதபுரம் மற்றும் ஏற்காடு பகுதியில் 2 ரேடார்கள் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருவதோடு, பல்வகை பேரிடர் முடிவு ஆதார அமைப்புகளையும் (Multi Hazard Decision Support System) ஏற்படுத்தி உள்ளது.

சென்னை, எழிலகத்தில் 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் மாநில அவசரகால செயல்பாட்டு மையம் மழை, புயல், வெள்ளம், நிலச்சரிவு மற்றும் நிலநடுக்கம் ஆகியவை குறித்தான முன்னெச்சரிக்கை தகவல்களை மாவட்ட நிருவாகத்திற்கும், பேரிடர் மேலாண்மையின் இதர துறைகளுக்கும், பொதுமக்களுக்கும், ஊடகங்களுக்கும் தெரிவித்து வருகிறது.

**முதல்வர் ஆலோசனையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!**

புயல் மற்றும் பருவமழைக் காலங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் வருகை தந்து, உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்தாலோசனை செய்து, மேற்கொள்ள வேண்டிய முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் குறித்து உத்தரவிட்டு வருகிறார்.

24 மணி நேரமும் செயல்படும் இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மாநில அவசரகால செயல்பாட்டு மையம் 10,000 சதுர அடி பரப்பில் 5.12 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டு முதலமைச்சர் அவர்களால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த மையத்தை பார்வையிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு, இம்மையத்தின் செயல்பாடுகள் குறித்து வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் விளக்கினார்.

**24 மணிநேரமும் இயங்கும் அவசரகால அழைப்பு மையம்!**

இந்த தரம் உயர்த்தப்பட்ட மையத்தில், பேரிடர் காலத்தில், முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களை தொடர்பு கொண்டு அறிவுரை வழங்கும் வகையில் காணொலி வசதியுடன் கூடிய கட்டுப்பாட்டு அறை (Control Room), பேரிடர் காலங்களில், அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பேரிடர் ஆயத்த நிலை, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வது குறித்து கலந்தாய்வு கூட்டம் நடத்திடும் வகையில் 70 இருக்கைகள் கொண்ட கூட்ட அரங்கம் (Conference Hall), பொதுமக்கள் தங்கள் புகார்களை பதிவு செய்யும் வகையில் 1070 மற்றும் 112 என்ற கட்டணமில்லா தொலைபேசியுடன் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய அவசரகால அழைப்பு மையம் (Call Centre), பல்வேறு துறைகளுக்கும் பொதுமக்களுக்கும் உடனுக்குடன் எச்சரிக்கை செய்திகள் வழங்கும் வகையிலான பேரிடர் தொழில்நுட்பப் பிரிவு (Multi Hazard Early Warning Technical Cell), மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த 48 துறைகளைச் சார்ந்த அலு வலர்கள் செயல்படும் வகையில் பல்துறை ஒருங்கிணைப்பு மையம் (Inter Departmental Coordination Centre), கட்டுப்பாட்டு மையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உணவு அருந்தும் அறை மற்றும் ஓய்வு அறை போன்ற பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**சேவைகள் அனைத்தும் தங்குதடையின்றி இயங்கும்!**

மேலும், தடையற்ற மின்சாரம், தொலைத்தொடர்பு மற்றும் இணையச் சேவை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், பேரிடர் காலங்களில் தங்குதடையின்றி 24 மணிநேரமும் இந்த மையம் செயல்படும்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, பேரிடர் மேலாண்மை இயக்குநர் வி.மோகனச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தோட்டக் கலை அலுவலர்கள் பணியிடங்களுக்குத் தேர்வான

# 158 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.08.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வேளாண்மை உழவர் நலத்துறையில் 158 உதவி தோட்டக்கலை அலுவலர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

வேளாண்மைத் துறைக்கு சிறப்பிடம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, விவசாயப் பெருமக்களை அழைத்து, அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்து வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதோடு, உழவர்களின் நலனை பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றமும் செய்யப்பட்டு, வேளாண் பெருமக்களின் வருவாயினை பன்மடங்காக உயர்த்திட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம், நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கம், விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கியது, விவசாயிகள் தங்கள் விளை நிலங்களின் மண் வளத்தினை அறிந்திட தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்கும் திட்டம், பயிர் பாதுகாப்பு திட்டம் போன்ற பல்வேறு சீரிய திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள் விவசாய பெருங்குடி மக்களை விரைவில் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுபேற்ற இந்த மூன்று ஆண்டு காலத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக வேளாண்மை அலுவலர், தோட்டக்கலை அலுவலர் போன்ற தொழில்நுட்ப பணியிடங்கள் மற்றும் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் போன்ற தொழில்நுட்பம் சாரா பணியிடங்கள் என மொத்தம் 1554 பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர், ஆய்வக உதவியாளர், அலுவலக உதவியாளர் போன்ற 223 பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, வேளாண்மை - உழவர் நலத்துறையில் காலியாக உள்ள உதவி தோட்டக்கலை அலுவலர் பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக 2023ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்வு மூலம் உதவி தோட்டக்கலை அலுவலர் பணியிடங்களுக்கு 158 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களில் 5 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்தினார்.

உதவி தோட்டக்கலை அலுவலர்கள், அனைத்து வருவாய் கிராமங்களின் அடிப்படை நிலை களப்பணியாளராக இருந்து, தோட்டக்கலை பயிர்களின் பரப்பளவு உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான திட்டங்களில் தோட்டக்கலை அலுவலர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநருக்கு உதவுதல், மண் மற்றும் நீர் மாதிரிகளை சேகரித்தல், தோட்டக்கலை திட்டங்களுக்கான இடு பொருட்களை விநியோகித்தல், பயிர் அறுவடை சோதனைகளை மேற்கொள்ளுதல், இயற்கை பேரிடரின் போது சேத மதிப்பீடு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையினை பெற்றுத் தருதல் போன்ற பணிகளை மேற்கொள்வர்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**திருச்சி (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**(இணையதள வழியில் மட்டும்)**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 4/2024–25 / முவஅ / நாள்: 17.08.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருச்சி அவர்களால் **ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் பணிகள் நபார்டு RIDF XXX / 2024-25-ன் கடனுதவி திட்டத்தின் கீழ் மதுரை** (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் கோட்டத்திற்கான **எட்டு சாலைப் பணிகளுக்கு** இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **17.9.2024 அன்று 14.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **31.8.2024** முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம்,**
**திருச்சி**

செ.ம.தொ.இ / 3187 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**தமிழ்நாடு அரசு**
**நெடுஞ்சாலைத் துறை**
**சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 04 / 2024–2025 / தவஅ / நாள்: 17.08.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம், அவர்களால், சென்னை மாநகர சாலைகள் மற்றும் திருவள்ளூர் (நெ) க(ம)ப கோட்டங்களைச் சார்ந்த **நிரந்தர வெள்ளத் தடுப்பு பணிகள் 2023–2024** மற்றும் **CRIDP 2024-2025 -க்கு இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **24.09.2024 பிற்பகல் 12.30 மணி** வரை வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.08.2024** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம)ப சென்னை வட்டம்**

செ.ம.தொ.இ/3126/ஒப்பந்தப்புள்ளி/2024

### போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்துங்கள்!

# பஞ்சாப், அரியானா மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

## பேச்சுவார்த்தை விபரங்களை அறிக்கையாக தாக்கல் செய்யவும் ஆணை!

புதுடெல்லி, ஆக. 23 –

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளிடம் பஞ்சாப், அரியானா மாநில அரசுகள் கூட்டாக பேச்சுவார்த்தை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், அரியானா மாநில எல்லைகளில் விவசாயிகள் நடத்தி வரும் போராட்டம் குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது விவசாயிகள் போராட்டத்தால் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் சாலைகளை திறப்பது குறித்தும், விவசாயிகள் பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்தும் ஹரியானா, பஞ்சாப் மாநில அரசுகள் கூட்டாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது.

மேலும், பேச்சுவார்த்தை விபரங்களை அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும் என்று இருமாநில அரசுகளுக்கும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

விவசாயிகள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண உச்சநீதிமன்றம் அமைத்துள்ள குழுவானது என்னென்ன அம்சங்கள் மீது ஆய்வு செய்ய வேண்டும் என்று விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

வழக்கின் விசாரணை செப்டம்பர் 2ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### வாழ்வு தேடிவந்த பலருக்கும் வசந்தத்தை வழங்கிய தாய் சென்னை!

# தருமமிகு சென்னையே நமது சமத்துவபுரம்!

## சென்னை நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக. 23-**

**385வது சென்னை நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், “தருமமிகு இந்த சென்னையே நமது சமத்துவபுரம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சென்னை நிலமாக மட்டுமல்ல, இந்த நிலத்தின் மீது வாழும் ஒவ்வொரு மனிதரின் உயிராகவும் இருக்கிறது.

வாழ்வு தேடி வந்த பலருக்கும் வசந்தத்தை வழங்கிட வா என்று தன் மடியோடு ஏந்திக் கொண்ட தாய் சென்னை!

இந்தத் தருமமிகு சென்னையே நமது சமத்துவபுரம்!

பல கனவுகளை வெற்றிக் கதைகளாக எழுதிய எழுதும் நம் சென்னையைக் கொண்டாடுவோம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

